[26th March 1964

கொஞ்சம் தாமதம் இருக்கலாம். அப்படியிருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

Children of defence personnel

* 417 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government havse arranged to give special consideration in the case of appointments and promotions to the children of the ex-defence personnel and serving defence personnel in view of their meritorious services and sacrifice for the country?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : நாட்டுக்காக உயிர் துறக்கும் மிலிடரி பர்சானலுடைய குழந்தைகளுக்குச் சலுகை கொடுக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பல சலுகைகள் இக்குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன.

செய்தித்துறை அலுவலகம், திருச்சிராப்பள்ளி

* 418 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியில் "செய்தித்துறை" அலுவலகம் ஒன்று திறக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எப்போது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) அரசாங்கம் ஏற்கனவே ஒரு செய்தித் துறை அலுவலகத்தை திருச்சிராப்பள்ளியில் 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 28-ந் தேதியில் ஆரம்பித்திருக்கிறது.

மாவட்ட ரஸ்தா போக்குவரத்து அபிவிருத்திக் கமிட்டி

* 419 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ரஸ்தா போக்குவரத்து அபிவிருத்தி திட்டக் கமிட்டி அமைக்க சர்க்கார் மாவட்டத் தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எத்தனை மாவட்டங்களில் மேற் சொன்ன கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The District Road Development and Traffic Planning Committee has been formed in all the districts in this State.